க்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 07.07.2026 செவ்வாய்கிழமை இதழ் : 182 பக்கங்கள் : 08



## சிறைக்குள் வெடித்த மோதலுக்கு பொறுப்பேற்றார் நீதி அமைச்சர்!

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடந்த மோதலுக்கு நீதியமைச்சர் என்ற வகையில் தாம் பொறுப்பேற்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மோதல் நடைபெற்ற இடத்துக்கு நேற்று 07

## கைதிகளிடமும் துப்பாக்கிகள்?

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் நேற்றுக் காலை தொடக்கம் வெடித்துள்ள வன்முறையின்போது சிறைக் கைதிகளின் கைகளில் துப்பாக்கிகள் சிக்கியிருக்கலாம் என்று அதிர்ச்சித் தகவல் 07

### நீர்கொழும்பில் தொடரும் பதற்றம்

# சிறைக்குள் நேற்றும் கொடூர மோதல்! 7 சிறை காவலர்கள், 19 கைதிகள் பலி!!

### 15 பேர் கவலைக்கிடமான நிலையில்



கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்றுக் காலையும் பெரும் கலவரம் ஏற்பட்டது. கட்டுக்கடங்காமல் நீடித்த இந்த மோதலில் சிக்கி நேற்று மட்டும் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

07 சிறைச்சாலை அதிகாரிகளும், 19 கைதிகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என தெரியவருகின்றது.

23 அதிகாரிகள் மற்றும் 77 கைதிகள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் 07

## பாதுகாப்புத் தரப்பின் சூட்டிலேயே கைதிகள் உயிரிழப்பு!

### வெளியாகியது அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்று உயிரிழந்த கைதிகள் அனைவரும் பாதுகாப்புத் தரப்பின் துப்பாக்கிச் சூட்டின் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்றுக் காலை உணவு வழங்கச் சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், நேற்று முன் தினம் சம்பவம் தொடர்பில் கைதிகளுடன் ஆக்ரோஷமாக நடந்து கொள்ள முற்பட்டதுடன், ஒரு சில கைதிகளை அச்சுறுத்தவும் முயன்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

கைதிகள் தரப்பில் இருந்து அதற்கு எதிர்ப்புக் குரல் 07

## நீர்கொழும்பு பெண் கைதிகள் மீண்டும் கூரை ஏறி போராட்டம்

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறையில் இடம்பெற்ற மோதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சிறையின் பெண்கள் பிரிவைச் சேர்ந்த கைதிகள் குழு ஒன்று நேற்றும் சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டது.

குறித்த போராட்டம் நேற்று மாலை வரை முன்னெடுக்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண் கைதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். 07

## மாதகல் விபத்தில் முதியவர் பலி!

யாழ்ப்பாணம் ஜூலை. 07

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் நேற்று திங்கள்கிழமை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் நல்லாயான் வீதி, 07

## சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்த முதல் சம்பவம்!

கொழும்பு, ஜூலை. 07

இலங்கை வரலாற்றில் சிறைக் கைதிகளின் தாக்குதலின் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உயிரிழந்த முதலாவது சந்தர்ப்பம் நீர்கொழும்பு சிறைச்சாலையில் பதிவாகியுள்ளது.

நேற்று முன் தினமும் நேற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக சிறைக்கைதிகள் மட்டுமன்றிச் சிறைச்சாலை உத்தியோத்தர்களும் உயிரிழந்துள்ளனர். 07

## வடக்கு ஆளுநரின் வர்த்தமானிக்கு இடைக்கால தடை விதிப்பதற்கு யாழ்.மேல் நீதிமன்று மறுப்பு!

### சாவகச்சேரி உபதவிசாளரின் கோரிக்கை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 07

வடக்கு மாகாண ஆளுநரால் தாம் பதவி நீக்கப்பட்டமைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உபதவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோர் தாக்கல் செய்திருந்த மனுவை வடக்கு மாகாண மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற அமர்வில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க நீதிபதி மறுப்புத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 19ஆம் 07

## நீர்கொழும்பிலிருந்து 700 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றம்!

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறையிலிருந்து சுமார் 700 கைதிகளை அங்குனகொலபெலஸ்ஸ, போகம்பரை, அநுராதபுரம், பொலனறுவை மற்றும் குருவிட்ட சிறைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் முதல் சிறையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த அவசர இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07

## பரபரப்பை ஏற்படுத்தியுள்ள விஜயதாஸ-ரணில் சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 07

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவாள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் விஜயதாஸவின் இல்லத்துக்கு நேரில் சென்றுள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது மகன் கைது செய்யப்பட்ட அதிர்ச்சியில் இருந்த விஜயதாஸ ராஜபக்ஷவை சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, அவருக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். 07

## ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் சிறை வன்முறையை விசாரிக்க குழு!

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் குறித்து முறையான மற்றும் விரிவான விசாரணை மேற்கொள்ள உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது சம்பவம் தொடர்பான விரிவாக ஆராயப்பட்டதன் பின்னர் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், நீர்கொழும்பு சிறைச்சாலையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் குறித்து 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெங்கு பரவல் வேகம் அதிகரிப்பு: உயிரிழப்புகள் உயரும் அபாயம்?

## வாராந்தம் 2,500 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, ஜூலை. 07

மேல் மாகாணத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அவற்றின் உச்சக் கொள்ளளவை எட்டியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக, அவர்களைப் பராமரிக்கும் நடவடிக்கைகள் கடுமையான சிரமத்துக்கும் அபாயத்துக்கும் உள்ளாகியுள்ளதாக அதன் தற்காலிக பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர குறிப்பிட்டார்.

நோயாளர்கள் அறிக்கைப்படுத்தப்படுவது இவ்வாறு அதிகரிப்பதன் காரணமாக, அதற்கு இணையாக வரும் நாள்களில் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும் என அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

தற்போது நாடு முழுவதிலும் இருந்து அறிக்கை செய்யப்பட்டுள்ள மொத்த டெங்கு நோயாளர்களான 59,638 பேரில் 52.4 வீதமானோர் மேல் மாகாணத்திலிருந்தே அறிக்கை செய்யப்பட்டுள்ளதாக வைத்தியர் கபில கன்னங்கர மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக, மேல் மாகாணத்துக்குள் அதிகளவான நோயாளர்களைக் கொண்ட 22 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பகுதிகளை மையமாகக் கொண்டு ஒரு வாரம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வாரத்தின் இறுதியில் அதன் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அதற்கமைய இந்த வேலைத்திட்டத்தை எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாக வைத்தியர் மேலும் கூறினார்.

தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால என மூன்று பகுதிகளாகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பணிப்பாளர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பு மிகவும் பாரதூரமான மட்டத்தை எட்டியுள்ளதாலும், பெருமளவிலான வைத்தியசாலைகள் தங்களது உச்சக் கொள்ளளவை எட்டி வைத்தியசாலைத் தொகுதிக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும், இந்த நேரத்தில் குறுகிய கால அவசர நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் வலியுறுத்தினார்.

# தொழில்முனைவோரை ஏமாற்றிவிட்டது அரசு!

## சாடுகிறார் திலித் ஜயவீர



கொழும்பு, ஜூலை. 07

நாட்டின் தொழில்முனைவோரை தற்போதைய அரசாங்கம் தவறான வழியில் வழிநடத்தி ஏமாற்றி வருவதாக சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு ஆதரவளித்த குழுக்களையும் அரசாங்கம் ஏமாற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜயவர்தனபுர கோட்டே பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இக்குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நம்பி, பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் இந்த அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதாக உறுதியளித்தபோதிலும், தொழில்முனைவோர் இன்னும் தொடர்ச்சியான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, வெற்றிகரமாக இயங்கி வரும் சில உள்ளூர் வணிகங்களுக்கு எதிராக உள்ளூர் அதிகாரிகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் நியாயமற்றவை என அவர் சுட்டிக்காட்டினார்.

# பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது

கொழும்பு, ஜூலை. 07

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் லிட்ரோ மற்றும் லாவ்ஸ் நிறுவனங்கள் எரிவாயு விலைகளைக் குறைத்துள்ளதைத் தொடர்ந்து, உணவகங்களில் விற்கப்படும் சில உணவுப் பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

எனினும், பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளைக் குறைக்கக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரைட் ரைஸ், கொத்து, பரோட்டா மற்றும் சிற்றுண்டிகளின் விலைகள் குறைக்கப்படுவதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் எரிவாயு விலை ஓரளவிற்குக் குறைக்கப்பட்ட போதிலும், பாண், பனிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளை எவ்வகையிலும் குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கேஸ் விலை சிறிய அளவில் குறைக்கப்பட்டதால் பேக்கரி உற்பத்திகளுக்கு எந்தப் பயனும் இல்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# அவசர நிலக்கரி கொள்வனவிலும் தரக்குறைவு; திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட ஐந்தாவது கப்பல்!

கொழும்பு, ஜூலை. 07

அவசர நிலக்கரி கொள்வனவு செயற்பாட்டில் கொண்டுவரப்பட்ட ஐந்தாவது நிலக்கரி கப்பல் தரமற்றது எனக் கண்டறிப்பட்டுள்ளது.

இந்தியாவின் தரஞ்ஜோத் ரிசோர்சஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஐந்தாவது அவசர நிலக்கரித் தொகுதி லங்கா கோல் கம்பனி லிமிடெட் நிறுவனத்தினால் புத்தளத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் நிலையில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த நிலக்கரித் தொகுதியில் தேவையான (கெலோரிபிக்) சாம்பல் அளவை பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாக அதன் ஏற்றியிறக்கல் துறைமுக அறிக்கை காட்டியுள்ளது.

இதன்படி, ஐந்து அவசர நிலக்கரித் தொகுதிகளில் இரண்டு, எல்.சி.சி நிறுவனத்தினால் கோரப்பட்ட குறைந்தபட்சத் தரங்களை பூர்த்தி செய்யவில்லை என்பதாகும்.

இது கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவை முடக்கியுள்ள தொடர் பின்னடைவுகளின் பட்டியலில் மேலும் ஒன்றாக இணைந்துள்ளது.

தரஞ்ஜோத் நிறுவனத்தின் முதலாவது நிலக்கரித் தொகுதிக்கான ஏற்றல் துறைமுக அறிக்கை, அதில் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிக சாம்பல் உள்ளடக்கம் இருந்ததை சுட்டிக்காட்டியிருந்தது.

எவ்வாறாயினும், அதன் ஜி.வி.சி அளவுகள் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததால் இலங்கை நிலக்கரி நிறுவனம் அந்தத் தொகுதியை ஏற்றுக்கொண்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், ஐந்தாவது நிலக்கரித் தொகுதி அவ்வாறு அமையவில்லை.

நிலக்கரியை இறக்குவதற்கு கடற்பரப்பு விரைவில் மிகவும் கொந்தளிப்பாக மாறும் என்பதால், நிலக்கரியை இறக்குவது கடினமாகிவிடும் எனக் குறிப்பிட்ட எரிசக்தி அமைச்சின் பதில் செயலாளர் நிராகரிக்கப்பட்ட ஐந்தாவது நிலக்கரித் தொகுதிக்கு பதிலாக புதிய தொகுதியை செப்ரெம்பர் முதல் வாரத்தில் வழங்குமாறு தரஞ்ஜோத் நிறுவனத்திற்கு தற்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# கடுமையான மருந்து தட்டுப்பாட்டால் தனியார் சுகாதாரத்துறையும் பாதிப்பு

கொழும்பு, ஜூலை. 07

அரசதுறை வைத்தியசாலைகளில் மட்டுமன்றி, தனியார்துறை வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களிலும் தற்போது கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து வைத்தியர் சமல் சஞ்சீவ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

தனியார்துறைக்கு மருந்துகளை வழங்கும் பல விநியோகத்தர்கள், தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் கொள்கைகள் மற்றும் பதிவு செய்யும் செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலைமையே தற்போதைய தட்டுப்பாட்டுக்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளதோடு, மருந்து ஒழுங்குமுறை அதிகார சபை சந்தையில் போட்டித் தன்மையுடன் மருந்துகளை விநியோகிப்பதற்குத் தேவையான அதிகளவிலான நிறுவனங்களைப் பதிவு செய்யத் தவறியுள்ளதால் இந்நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது.

இதன் விளைவாக, பெரும்பாலான தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மாத்திரைகள், கப்ஸ்யூல்கள் மற்றும் தடுப்பூசிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# மேலும் 20-25 வருடங்கள் இந்த ஆட்சி நீடிக்கவேண்டுமென மக்கள் விருப்பம்

## தேவானந்த சுரவீர எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஜூலை. 07

இந்த ஆட்சி மேலும் 20 அல்லது 25 ஆண்டுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என மக்கள் கூறுவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் பலத்த நம்பிக்கை நிலவுவதாக தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்ட "மிகவும் கஷ்டமாக இருக்கிறது" போன்ற கோஷங்கள் தற்போது மக்கள் மத்தியிலிருந்து மறைந்துவிட்டதாக அவர் கூறினார்.

மக்கள் இப்போது எவ்வித குறைகளையும் கூறுவதில்லை என்பதுடன், அரசாங்கத்தின் நிவாரண வேலைத்திட்டங்கள் குறித்து அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் நன்மதிப்பு மற்றும் கருத்துகளைப் பார்க்கும்போது, அவர்களுக்கு இந்த அரசாங்கம் மேலும் 20 முதல் 25 ஆண்டுகள் தேவை என்பது தெளிவாகப் புரிகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.07.2026 செவ்வாய்கிழமை
பராபவ வருடம், ஆனி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சிறைக் கலவரங்கள்

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த இரு நாட்களாக கலவரத்தில் ஏழு சிறைக் காவலர்களும் 19 கைதிகளும் கொல்லப்பட்டிருப்பதாகவும் பொலிசாரும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரும் நிலைவரத்தைக் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு பெரும் சிரமப்படுவதாக நேற்று இரவு இறுதி யாகக் கிடைத்த செய்திகள் கூறின.

இலங்கையில் சிறைக் கலவரங்கள் ஒன்றும் புதிய நிகழ்வுகள் அல்ல. முன்னரும் கலவரங்கள் இடம் பெற்றிருக்கின்றன. முன்னைய கலவரங்க ளுக்கான காரணிகள் மற்றும் அவற்றை அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளில் இருந்து படிப்பி னைகளைப் பெற்று முறையான முன்னெச்சரிக்கைத் திட்டங்களை வகுத்தி ருந்தால் நீர்கொழும்பு சிறைச்சாலை கலவரத்தை அடக்குவதில் இந்தளவுக்கு சிரமங்களை எதிர் நோக்கவேண்டிய நிலை வந்திருக்காது.

ஞாயிற்றுக்கிழமை வெடித்து திங்கட்கிழமை இரவுவரை நீர்கொழும்பு சிறையில் நீடித்த கலவரம் இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் சிறைத் துறையின் மிகவும் மோசமான தோல்விகளில் ஒன்று என்று பாதுகாப்புத்துறை அவதானிகள் வர்ணிக்கிறார்கள்.

சிறைச்சாலைக்குள் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கை களில் ஈடுபடும் ஒரு குழுவுக்கும் அதற்கு எதிரான இன்னொரு குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட வன்முறை மோதலே இந்த கலவரத்துக்கு தூண்டுதலாக அமைந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக அரசாங்கம் நாட்டில் முன்னெடுத்து வருகின்ற போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக சாதாரண போதைப் பொருள் பாவனையாளர்கள் முதல் பெரியளவிலான போதைப் பொருள் கடத்தல் காரர்களினால் சிறைச்சாலைகள் நிரம்பியிருக்கின்றன.


போதிய கண்காணிப்பற்ற நிலையில், எதிரெதிர் பாதாள உலகக் குழுக்க ளைச் சேர்ந்தவர்கள் அருகருகாக நெருக்கமாக அடைக்கப்படும்போது சிறைச் சாலை வளாகங்களுக்குள்ளும் அவர்களின் போட்டி நீட்சிபெறும் ஆபத்து இருக் கிறது. அண்மைக் காலத்தில் இலங்கையின் வெவ்வேறு சிறைகளில் இடம் பெற்ற கலவரங்களில் வன்முறைகளின் கடும் உக்கிரத்துக்கு இது ஒரு முக்கிய காரணியாகும்.

நீர்கொழும்பு சிறைச் சாலையில் கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் சிறைக் காவலர்களை மடக்கி சிறையில் இருந்த துப்பாக்கிகளை கைப்பற்றியதை அடுத்தே ஆரம்பக்கட்ட மோதல் கட்டுப்பாட்டை மீறிச்சென்றது. அதன் காரண மாக நிலைவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் கலகத்தடுப்பு பிரிவினரை களமிறக்கவும் சிறை எல்லைகளைக் கண்காணிக்க ட்ரோன்களை பயன்படுத்தவும் அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இலங்கையின் சிறைச்சாலைகளில் வழமையாக உள்ளதைப் போன்று நீர்கொழும்பு சிறைச்சாலையும் அதன் உண்மையான கொள்ளளவை விடவும் பெருமளவிலான கைதிகளைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இத்தகைய நெரிசலான சூழலில், வன்முறையுடனேயே வாழப்பழகிவிட்ட போதைப்பொருள் கடத்தல் குழுக்களிடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினமானதாகும்.

போட்டிப் போதைப்பொருள் குழுக்களைச் சேர்ந்த கைதிகள் தங்களை அணிதிரட்டிக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டு வெற்றிகரமாகத் துப்பாக்கி களைக் கைப்பற்றியமை சிறைச்சாலையில் புலனாய்வுத் தகவல்களில் உள்ள கடுமையான குறைபாடுகளையும் போதியளவில் சிறைக்காவலர்கள் இல்லா தமையையும் வெளிக்காட்டுவதாக பாதுகாப்புத்துறை அவதானிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இன்று சகல சிறைச்சாலைகளிலும் போதைப்பொருள் கடத்தல் குழுக்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் இருப்பதால் நீர்கொழும்பு கலவரம் எதிர்காலத்தில் இத்தகைய கலவரங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு அவசியமான கடுமையான திட்டங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.



# டொனால்ட் ட்ரம்பின் செல்வமும் அதிகாரமும்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெ ரிக்க அரசியலமைப்பின் மீது மிகுந்த மரி யாதை கொண்டவர் என்று அறியப்பட்டவர் அல்ல. ஆனால், அவரது இரண்டாவது பதவிக் காலத்தில், தனது முதலாவது பதவிக்காலத் தின் போதே அவர் முன்வைத்த ஒரு வாதத்தை மீண்டும் இரட்டிப்பு வேகத்தில் வலியுறுத்தி வருகிறார்:

அதாவது, அந்த அரசியலமைப்பு வாசகம் அவருக்கு “ஜனாதிபதி என்ற முறையில் நான் விரும்பியதைச் செய்வதற்கான உரிமையை” வழங்குகிறது என்பதே அது.

மென்மையாகச் சொல்வதானால், இது அரசியலமைப்பின் “பிரிவு 2”-க்கு (Article 2) கொடுக்கப்படும் மிகவும் விசித்திரமான ஒரு விளக்கமாகும். ஆனால், சமீபத்திய நாள்களை ஆக்கிரமித்திருக்கும் முக்கியச் செய்திகளை ஒன்றாக இணைக்கும் நூல் இதுதான் அவருக்கு சாதகமாக அமைந்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின் தொடர்ச்சி, மற்றும் அவர் மீண் டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 2 பில்லியன் டொலர்களை வருமானமாக ஈட்டியுள்ளார் (அதில் பாதி கிரிப்டோகரன்சி எனப்படும் மறைக்குறியீட்டு நாணயங்கள் மூலம் கிடைத் தது) என்று வெளிப்படுத்தப்பட்டமை ஆகிய வையே அவை.

அமெரிக்க அரசாங்க நெறிமுறைகள் அலு வலகத்தால் (US Office of Government Ethics) கடந்த வாரம் வெளியிடப்பட்ட 927 பக்க ஆவணம், ஒரு தலைசுற்ற வைக்கும் வருமானப் பட்டியலை விவரிக்கிறது – இது கோல்ஃப் மைதானங்கள் மற்றும் ட்ரம்ப் பிராண்ட் பைபிள்களிலிருந்து கிடைத்த வருமானம் மட்டுமல்லாமல், அவர் இடைவிடாது விளம் பரப்படுத்தி வரும் கிரிப்டோ மற்றும் இலாப கரமான வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மூலமும் கிடைத்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்து அவருக்கு நன் கொடைகள் வந்து குவிகின்றன. கடந்த புதன் கிழமை கட்டார் நாட்டினால் பரிசாக வழங்க ப்பட்ட போயிங் 747 விமானத்தில் அவர் தனது முதல் பயணத்தை மேற்கொண்டார்.

அவர் இவ்வாறு செல்வம் குவிப்பதில் எந்தவிதமான பரஸ்பர நலன் முரண்பாடும் (conflict of interest) இல்லை என்ற வெள்ளை மாளிகையின் வாதம், 47-வது ஜனாதிபதி ட்ரம்பிற்கும் தனிமனிதரான ட்ரம்பிற்கும் இடையே பெரிய வேறுபாடு எதுவும் இல்லை என்ற அவரது சொந்த நம்பிக்கையின் நேரடி விளைவே ஆகும்.

நவீன அரசின் அதிகாரத்துவ அமைப்பா னது (bureaucracy), “அதிகாரப்பூர்வ செயல் பாட்டை தனிப்பட்ட வாழ்க்கையின் கோளத் திலிருந்து பிரிக்கிறது” என்றும், அங்கு உறவு கள் “தனிநபர் சலுகைகள் மற்றும் ஆதரவு வழங்குதல்களின்” அடிப்படையில் அல்லா மல் விதிகளின் படியே நிர்வகிக்கப்படுகின்றன என்றும் மேக்ஸ் வெபர் எழுதியிருந்தார்.

மேலும், “இடைக்காலங்களில் பொதுவாக இருந்தது போல, பதவியில் இருப்பது என்பது வாடகைகள் அல்லது ஊதியங்களைச் சுரண்டு வதற்கான ஒரு ஆதாரமாக இருக்கக்கூடாது” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், ட்ரம்ப் கடிகார முள்ளை பின்னோக்கி நகர்த்தி, நவீன நிர்வாகத்தை ஒரு நிலப்பிரபுத்துவ அரசவையாக (feudal court) மறுவடிவமைப்பு செய்துள்ளார்.

உச்ச நீதிமன்றம் சில நேரங்களில் அவரது இந்த எல்லைமீறிய அதிகாரக் கொள்கைகளை நிராகரிக்கிறது, ஆனால் அது மிகவும் அரிதாகவே நடக்கிறது. அதுவும் பெரும்பா லும் வால் ஸ்ட்ரீட்டை (அமெரிக்க நிதியகம்) பாதிக்கும் விடயங்களில்தான் அவ்வாறு செய்கிறது – உதாரணமாக, வரிகள் விதிப்பு விவகாரத்தில் அல்லது கடந்த வாரம் ஃபெடரல் ரிசர்வ் கவர்னரான லிசா குக்கை தகுந்த காரணமின்றி பணிநீக்கம் செய்ய ட்ரம்ப் முயன்றதை நிராகரித்ததில் இதைக் காணலாம்.

பிறப்புரிமை குடியுரிமைக்கு (birthright citizenship) அவர் விடுத்த சவாலை நீதிமன்றம் நிராகரித்தது அவசியமானது மற்றும் வரவேற் கத்தக்கது என்றாலும், அது கடந்து செல்ல வேண்டிய மிகக் குறைந்தபட்ச தகுதியே ஆகும்.

ஃபெடரல் ரிசர்வ் அமைப்பைப் பாதுகாப் பதில் நீதிமன்றம் எடுத்த முடிவு சரியானது் ஆனால், அதுவே முன்னர் சுதந்திரமாகச் செயல்பட்ட முகமைகளின் தலைவர்களை ஜனாதிபதி தனது விருப்பப்படி பணிநீக்கம் செய்வதற்கான பரந்த அதிகாரத்தை வழங்கு வதை நியாயப்படுத்துவதைக் கடினமாக்குகி றது, இது 1935ஆம் ஆண்டின் தீர்ப்பை தலை கீழாக மாற்றுகிறது.

புலம்பெயர்ந்தோருக்கான தற்காலிகப் பாதுகாப்பு அந்தஸ்தை இந்த நிர்வாகம் ரத்து செய்வதை அனுமதிப்பது, பல்லாயிரக்கணக் கான ஹைட்டி மற்றும் சிரிய மக்களுக்கும், அதற்கும் மேலாக, பாதுகாப்பற்றவை என்று அமெரிக்கா அங்கீகரித்துள்ள நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படும் அபாயத்தை எதிர் கொள்ளும் 1.3 மில்லியன் மக்களுக்கும் இழை க்கப்படும் ஒரு பயங்கரமான அநீதியாகும்.

ஆனால், இதன் பரந்த தாக்கங்கள் மேலும் கவலையளிக்கின்றன. உச்ச நீதிமன்றத்தின் முன் இருந்த கேள்வி, நிர்வாகத்தால் எப்போ தாவது புலம்பெயர்ந்தோருக்கான தற்காலிக பாதுகாப்பை ரத்து செய்ய முடியுமா என்பது அல்ல, மாறாக சட்டப்படி அவ்வாறு செய்யத் தவறும்போது அதை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியுமா என்பதுதான். நிர்வாகம் எல்லை மீறும்போது நீதிமன்றங்களை நாடு வதற்கான உரிமைக்கு எதிராகவே பெரும்பா ன்மை நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, நீதித்துறை யும் அதற்கு இணங்கிப் போகும்போது, கவன மாகப் பிரிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மீண் டும் ஒன்றிணைக்கப்படுகின்றன. உச்ச நீதிமன் றத்தின் சமீபத்திய போக்குகள் குறித்து கடந்த ஆண்டு நீதியரசர் கேடான்ஜி பிரவுன் ஜாக்சன் எழுதியது போன்று “இந்த நிர்வாகம் எப்போ தும் வெல்கிறது.” உச்ச நீதிமன்றத்தில் சீர்திரு த்தம் செய்யப்பட வேண்டும் என்ற வாதம் வலுத்து வருகிறது – இதற்கு முதன்மையாக அந்த நீதிமன்றத்தின் சொந்த நடவடிக்கைகளே காரணமாகும்.

இந்த வாதங்கள் நிச்சயமாகக் கேட்கப்பட வேண்டியவை. ட்ரம்பின் கட்டளைகள் மற் றும் விருப்பத்திற்குரியவர்களின் அரசவையை அதன் வரலாற்று முன்னோடிகளிலிருந்து உண்மையிலேயே வேறுபடுத்துவது, சட்டவி ரோத ஈரான் போரால் நிரூபிக்கப்பட்டதைப் போல, அதன் பரந்த எல்லையும் தாக்கமும் தான். முக்கியமான கட்டுப்பாடுகள் இன்னும் மீதமுள்ளன, அவை கண்டிப்பாகப் பாதுகாக் கப்பட வேண்டும். ஆனால், எந்தவொரு மன் னரையும் விட அதிக அதிகாரத்தைக் கையா ளும் ஓர் ஜனாதிபதியின் கீழ் அமெரிக்கா தனது 250ஆவது சுதந்திர தினத்தைக் கொண் டாடும் வேளையில், அவர் அழித்த அந்தச் சமநிலை மற்றும் கட்டுப்பாடுகளை (checks and balances) எவ்வாறு மீண்டும் நிலைநிறுத் துவது என்று அது தனக்குத்தானே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும்.

(த கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**கடகம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**தனுசு**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

# நெடுந்தீவில் ரூ. 1000 மில்லியன் மதிப்பிலான பல்துறை அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்கேற்றார்

யாழ்ப்பாணம், ஜூலை. 07

"வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் தேசியக் கொள்கை முழக்கத்தின்கீழ், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில், நெடுந்தீவு மக்களின் நீண்டகால தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான பல்வேறு பிரம்மாண்ட அபிவிருத்தித் திட்டங்கள் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த முக்கிய திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.

நெடுந்தீவின் ஒட்டுமொத்த வளர்ச்சி என உத்தேசமாக 1000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு மக்களின் மிக முக்கிய தேவையாகக் கருதப்பட்ட நிரந்தர பெற்றோல் நிரப்பு நிலையம் அமைப்பதற்காக, 40,066,375 ரூபாய் செலவில் நேற்று முன் தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இதன் மூலம் தீவுப்பகுதி மக்களின் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு நிரந்தர தீர்வு எட்டப்படவுள்ளது.

இவ்விழாவில் உரையாற்றிய அமைச்சர், வடபகுதியின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதி விவரங்களை வெளியிட்டார்.

2025ஆம் ஆண்டில் வடபகுதி வீதி மேம்பாட்டிற்கு மட்டும் 20 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

2025ல் வடக்கின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு 13 பில்லியன் ரூபாய் (13,000 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டில், இதைவிடக் கூடுதலான நிதி வடபகுதி அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

2025ஆம் ஆண்டில் 27 வீட்டுத்திட்டங்களும், 2026ஆம் ஆண்டில் 18 புதிய வீட்டுத்திட்டங்களும் நெடுந்தீவு மக்களுக்காகக் கையளிக்கப்படவுள்ளன.

பொட்டல்காளி வீதி, செபநாயகபுரம் கடற்கரை வீதி, நெல்வரை வேதனியார் வீதி, கட்டுராமன்சாலி வீதி, மெச்சன்வளவு வீதி, மகரதமொழியல் வீதி, அம்மாவோடை வீதி, கோணன் தோட்ட வீதி மற்றும் நொலன் செனல் வீதி உள்ளிட்ட பல வீதிகள் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படுகின்றன.

மாவிலித்துறை இறங்குதுறை பயணிகள் வசதிக்காக 17 மில்லியன் ரூபாய் செலவில் நவீன காத்திருப்பு மண்டபம் மற்றும் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பெருக்கு மரத்தைச் சூழவுள்ள பகுதியில், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 8.9 மில்லியன் ரூபாய் செலவில் விற்பனை நிலையங்கள், இருக்கைகள், மலசலகூட மற்றும் குடிதண்ணீர் வசதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

றோமன் கத்தோலிக்க பெண்கள் கல்லூரிக்கு புதிய வகுப்பறை கட்டிடமும், இருதய மற்றும் சென்.ஜோன்ஸ் முன்பள்ளிகள் புனரமைப்பும் செய்யப்படவுள்ளன.

அத்துடன், உதயசூரிய விளையாட்டுக்கழக மைதானமும் மேம்படுத்தப்படவுள்ளது.

தண்ணீர் பவுஸர் திருத்தம், புதிய கிணறு நிர்மாணிப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கம் (கட்டம் 2), நெடுந்தீவு கடற்கரையில் குளியலறை வசதி என்பன மாகாண விசேட நிதியின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

நெடுந்தீவுக்கான மின்சாரத் தேவையை நிறைவு செய்ய, சுற்றுச்சூழலுக்கு உகந்த மீள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (காற்றாலை மற்றும் சூரிய ஒளிப் படல்கள்) மூலமான மின் உற்பத்தித் திட்டமும், அவசரத் தேவைக்கான மின் பிறப்பாக்கி வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

தீவின் பிரதான போக்குவரத்தைச் சீரமைக்க புதுப்பிக்கப்பட்ட புதிய பஸ் வசதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# நாவாந்துறையில் வாள்வெட்டு; மூன்று பேர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், ஜூலை. 07

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த கும்பல் ஒன்று, நாவாந்துறைப் பகுதியில் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வீடொன்றினில் புகுந்து வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்த துணிகர வாள்வெட்டுச் சம்பவம் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்றது.

தாக்குதலில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறைப் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் அதிகாலை கிளிநொச்சியில் இருந்து பட்டாரக வாகனத்தில் நாவாந்துறையில் உள்ள குறித்த வீட்டுக்கு வந்த கும்பல், தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தப்பிச் சென்ற நபர்களை கைது செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வவுனியா வடக்கு தவிசாளர் மாற்றம்?

வவுனியா, ஜூலை. 07

வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளரை மாற்றுவது தொடர்பில் தமிழரசுக் கட்சி மாவட்டக் குழு தீர்மானித்து இருப்பதாக தெரியவருகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் பிரதேச சபைகளுக்கான தலைவர்கள் தெரிவின் போது சுழற்சி முறையில் தமது உறுப்பினர்களுக்கு தவிசாளர் பதவியை வழங்குவதாக கட்சி தீர்மானித்திருந்தது.

இதன் பிரகாரம் முதல் ஒரு வருடம் தற்போதைய தவிசாளராக உள்ள கிருஸ்ணவேணிக்கு வழங்குவது எனவும் அடுத்த வருடம் ஏனைய உறுப்பினர்களில் ஒருவருக்கு வழங்குவது எனவும் கட்சியின் மாவட்டக் குழு தீர்மானித்திருந்த நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் இராஜினாமா கடிதத்தைத் தருமாறும் கட்சியின் மாவட்டக் குழு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானித்து அவருக்கு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் தற்போதைய தவிசாளர் எதிர்வரும் 18ஆம் திகதி தனது இராஜினாமா கடிதத்தை கொடுப்பாரா என்கின்ற கேள்வி எழுந்திருப்பதுடன் வவுனியாவில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் வவுனியா வடக்கு பிரதேச சபையிலேயே பெண் தவிசாளர் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 'சமகால சமூகமும் போராளிகளின் வகிபாகமும்' வவுனியா நகர மண்டபத்தில் ஒன்றுகூடல் நிகழ்வு



வவுனியா, ஜூலை. 07

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சமகாலச் சமூகமும் போராளிகளின் வகிபாகமும் எனும் தலைப்பில் நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

இதன்போது வரலாற்றின் வேர்கள் விருது வழங்கும் நிகழ் வும் இடம்பெற்றிருந்ததோடு போராளிகளின் தற்போதைய வாழ்வி யல் தொடர்பாகவும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக்வும் உரைகளும் இடம் பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், சமூக செயற்பாட்டாளர் ரஜீவ்காந், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் மா. இளம்பிறை உட்பட பல்வேறுபட்ட சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதித்துறைக்குள் அரசின் நேரடி அரசியல் தலையீடு

## நிரோஷன் பாதுக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ,ஜூலை. 07

உயர்நீதிமன்ற மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதன் மூலம், தற்போதைய திசைகாட்டி அரசு நீதித்துறைக்குள் நேரடி அரசியல் தலையீடுகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றது என்று ஊழல் எதிர்ப்பு முன்னணியின் அழைப்பாளர் நிரோஷன் பாதுக்க கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முதன்மைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாட்டின் 1972 மற்றும் 1978ஆம் ஆண்டு அரசமைப்புகளின்படி, உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் 65 வயதிலும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் 63 வயதிலும் ஓய்வுபெற வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தற்போதைய அரசு இந்த ஓய்வுபெறும் வயதை மேலும் நீடிப்பதற்குத் திடீர் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சியில் இருந்தபோது இது குறித்து எந்தவொரு கருத்தையும் வெளியிட்டிருக்கவில்லை.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின்படி, பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 11 இலிருந்து 19 ஆகவும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 12 இலிருந்து 20 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

ஆனால், கடந்த சில மாதங்களில் மட்டும் நீதித்துறை அமைப்பில் 8 நீதியரசர்கள் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வெற்றிடங்களுக்கான தகுதியான பெயர்களை ஜனாதிபதி இதுவரை அரசமைப்பு சபைக்குப் பரிந்துரைக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில், நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கே ஜனாதிபதி தலைமையிலான அரசு முன்னுரிமை வழங்கி வருகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் தற்போதைய பிரதம நீதியரசர் ஓய்வுபெறவேண்டும். ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதாயின், அது ஏன் உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்? நாட்டின் நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், மருத்துவர்கள் மற்றும் அரச சேவையின் ஏனைய உயர் அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயதும் அதிகரிக்கப்படவேண்டும் அல்லவா?

பிரதம நீதியரசர் ஓய்வுபெறுவதால் நாட்டின் நீதித்துறை கட்டமைப்பு ஒருபோதும் வீழ்ச்சியடைந்துவிடாது. ஆனால் அவரது பதவிக்காலத்தை அரசியல் தேவைகளுக்காக நீடிப்பது நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்குக் கடுமையான மற்றும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்போது நீதித்துறை முறைமையானது அரசியல்மயப்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை நீடிக்கவேண்டிய தேவை நாட்டு மக்களுக்கு இல்லை, அது தற்போதைய அரசுக்கே உள்ளது. அரசின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ள விடயங்களைச் செயல்படுத்துவதற்காகவே மக்கள் இந்த அரசுக்குப் பெரும்பான்மை பலத்தை வழங்கினார்களே தவிர, அரசமைப்பைத் திருத்தி நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அல்ல-என்றார்.

(அ)

# நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் விசேட விசாரணைக் குழு நியமனம்

கொழும்பு, ஜூலை. 07

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையிலான இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 35 காயமடைந்த கைதிகள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையை வெளிப்படுத்தியமை தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடே இந்த வன்முறைக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

“போரு மூனா” என அழைக்கப்படும் பாதாள உலகக் குழுத் தலைவருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட சுரேஷ் என அடையாளம் காணப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரே கைதிகளுக்கிடையிலான இந்த வன்முறை மோதலைத் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், கைதிகளுக்கிடையிலான மோதலின் பின்னர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் பெண் கைதிகள் குழுவொன்று சிறைக்கூரையின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, ஆண் கைதிகளும் சிறைக் கூரையின் மீது ஏறி தனித்தனியாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து, சிறைச்சாலைக்கு வெளியே கைதிகளின் உறவினர்கள் திரண்டு, உள்ளே இருப்பவர்களின் நிலை குறித்த தகவல்களை வழங்க அதிகாரிகள் தவறிவிட்டதாகக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கைதிகளைப் பார்வையிட உறவினர்களின் குழுவொன்றுக்கு பொலிஸார் அனுமதி வழங்கினர்.

சம்பவத்தைத் தொடர்ந்து, நீர்கொழும்பு மற்றும் சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், கலவரத் தடுப்புப் பிரிவினரும் சிறைச்சாலைக்கு வரவழைக்கப்பட்டு, அமைதியை நிலைநாட்டவும் பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# முகநூல் முழுவதும் முட்டாள்கள்!

## தயாசிறி ஜயசேகர எம்.பி. கடும் விமர்சனம்



கொழும்பு, ஜீலை 07

முகநூல் முழுவதும் முட்டாள்கள் நிறைந்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கடுமையான விமர்சனம் ஒன்றை முன்வைத்துள்ளார்.

முகநூல் “முட்டாள்களால் நிரம்பி வழிகிறது” என்றும், “அறிவார்ந்த விவாதங்களில் ஈடுபடும் இடம் அல்ல” என்றும் நம்புவதால், அதைத் தாம் பயன்படுத்துவதில்லை என்று கூறியுள்ளார்.

பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றியபோது அவர் இந்த விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், அர்த்தமுள்ள விவாதங்களுக்கான ஒரு களமாக முகநூலைக் கருதாததால், அந்த சமூக ஊடகத் தளத்தைத் தவிர்ப்பதாகக் குறிப்பிட்டார்.

“நான் முகநூலுக்குச் செல்வதில்லை, ஏனெனில் அது முட்டாள்கள் நிறைந்தது. அது அறிவாளிகள் வாதிடக்கூய ஒரு களம் அல்ல. அதனால்தான் நான் அங்கு செல்வதில்லை, அதைப் பார்ப்பதும் இல்லை“ என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைக் குற்றவாளிகள், இனவாதிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது ஊழல்வாதிகள் என்று முத்திரை குத்தி, அவர்களின் நற்பெயரைக் கெடுக்க அரசாங்கம் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டியே தயாசிறி ஜயசேகர இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புதிய மெட்ரோ பஸ் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட பேரழகியைப் போன்றது!

## கெமுனு விஜேரத்ன விமர்சனம்



கொழும்பு, ஜூலை. 07

இலங்கைக்கு புதிதாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள மெட்ரோ பஸ்கள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

தற்போது புதிய பஸ்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. சுமார் 4 கோடியே 20 இலட்சம் அல்லது 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த பஸ்களை இறக்குமதி செய்து, கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் அந்த விலைக்கு இணையான சேவையை வழங்கி, இலாபகரமாக இயக்குவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இதுவே தற்போதைய கசப்பான உண்மை.

பொதுவாக அழகிய பெண்களை ஆண்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், என்னை பொறுத்தவரை தற்போதைய இந்த புதிய பஸ் திட்டமானது எய்ட்ஸ் நோய்த்தொற்றுக்குள்ளான ஒரு பேரழகியைப் போன்றது.

இந்த திட்டத்துக்காக அரசாங்கத்தின் திறைசேரிதான் பெருமளவு பணத்தை வழங்கியுள்ளது. நாளாந்தம் இந்த பஸ்களை இயக்கும்போது ஏற்படும் நட்டத்தினால், திறைசேரியின் பணமே வீணாக அழியப்போகின்றது" என கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்தார். (அ)

# சரித் அபேசிங்க விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு!

கொழும்பு, ஜூலை. 07

பாதாள உலகக் கும்பலின் தலைவர் ஒருவரிடமிருந்து இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பாகக் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சரித் அபேசிங்க விவகாரம் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் பாரிய முரண்பாடுகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரணை தொகுதி அமைப்பாளராக இருந்த சரித் அபேசிங்க, ஹரக் கட்டா என்றழைக்கப்படும் பாதாள உலகக்கும்பல் தலைவனிடமிருந்து பெரும் தொகைப் பணம் இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் தற்போதைக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் இலஞ்ச விவகாரத்தில் சிக்கியதை அடுத்து அவரது கட்சிக்குள் ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் காரணமாகக் கட்சித் தலைவர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ள நிலையில், கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சரித் அபேசிங்க போன்ற நபர்கள் இதற்கு முன்னர் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்கள் என்பதை அறிந்திருந்தும், அவரைக் கட்சிக்குள் உள்வாங்கிய குழு மீது உடனடியாக ஒரு ஒழுங்கு நடவடிக்கை விசாரணையை நடத்துமாறு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# 61,060 பேருக்கு டெங்கு!

கொழும்பு, ஜூலை. 07

இந்த ஆண்டு இதுவரை இலங்கையில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 61,060 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகளின்படி, கடந்த 24 மணிநேரத்தில் 2,604 புதிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிகூடிய எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். இது மொத்த தொற்றுகளில் 52.5 சதவீதமாகும் (32,054 நோயாளர்கள்). தென் மாகாணத்தில் 9,674 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 5,237 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் 4,823 நோயாளர்களும், கிழக்கு மாகாணத்தில் 2,979 நோயாளர்களும் மற்றும் வடமேல் மாகாணத்தில் 2,778 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். ஏனைய மாகாணங்களில் ஊவா மாகாணத்தில் 1,550 நோயாளர்களும், வடமத்திய மாகாணத்தில் 1,013 நோயாளர்களும் மற்றும் வட மாகாணத்தில் 957 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மாவட்ட ரீதியாக, அதிகூடிய டெங்கு நோயாளர்களைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு பதிவாகியுள்ளது (12,445 நோயாளர்கள்). கம்பஹா மாவட்டம் 12,282 நோயாளர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. மாத்தறை மாவட்டத்தில் 4,428 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 4,092 நோயாளர்களும், கண்டி மாவட்டத்தில் 3,802 நோயாளர்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 3,588 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். காலி மாவட்டத்தில் 3,501 நோயாளர்களும், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 2,557 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,745 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதற்கிடையில், கேகாலை மாவட்டத்தில் 1,649 நோயாளர்களும், குருநாகல் மாவட்டத்தில் 1,629 நோயாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,220 நோயாளர்களும் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 1,149 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். மொனராகலை மாவட்டத்தில் 776 நோயாளர்களும், பதுளை மாவட்டத்தில் 774 நோயாளர்களும் மற்றும் யாழ்ப்பாணத்தில் 708 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 656 நோயாளர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 563 நோயாளர்களும், அனுராதபுரம் மாவட்டத்தில் 531 நோயாளர்களும், பொலனறுவை மாவட்டத்தில் 482 நோயாளர்களும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 412 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 365 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் வவுனியா (94), மன்னார் (64), கிளிநொச்சி (56) மற்றும் முல்லைத்தீவு (35) ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர். (அ)

# கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது ஆடுகளத்தில் சரிந்து விழுந்து வீரர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை. 07

பேருவளை, சீனன்கோட்டை பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் பழைய மாணவர்களுக்கு இடையில் நேற்று முன் தினம் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியின் போது, விளையாடிக்கொண்டிருந்த வீரர் ஒருவர் ஆடுகளத்திலேயே சரிந்து விழுந்து துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவர் ஆவார்.

பழைய மாணவர்களிடையேயான உறவை வளர்க்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த கிரிக்கெட் போட்டியில் அவர் விளையாடிக் கொண்டிருந்த போது, திடீரென ஆடுகளத்தின் நடுவே சரிந்து விழுந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் உடனடியாக செயற்பட்டு அவரை பேருவளை பிரதேச மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போதே அவர் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

திடீர் மாரடைப்பு இந்த மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், இந்த சம்பவம் தொடர்பாக பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# திருக்கோவில் ஆடி அமாவாசை உற்சவக் கொடியேற்றம் 26 இல்!

காரைதீவு, ஜூலை. 07

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது .

தொடர்ந்து 18 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை சமுத்திரத்தில் நடைபெறும்.

அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

அன்றைய தினம் முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும் முக்கியமான கிரியை அங்கு நடைபெறுவது வழமையாகும்.

மறுநாள் 13 ஆம் தேதி பூங்காவனத்திருவிழா வள்ளி திருமணமும் நடைபெறும்.

தொடர்ந்து மறுநாள் 14 ஆம் திகதி வயிரவர் பூசையுடன் நிறைவடையவுள்ளது. (அ)

# புலமைபரிசில் மாணவர் பாராட்டு விழா

காரைதீவு, ஜூலை. 07

தம்பிலுவில் தேசிய சேமிப்பு வங்கியின் ஏற்பாட்டில் 2023,2024,2025 ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதக்கம் அணிவித்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

"இளைய மனங்களை ஊக்கப்படுத்தி ஒளிமயமான நாளை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளுக்கு அமைய நடைபெற்ற இவ் விழா, தம்பிலுவில் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் என்.ஜனன் தலைமையில் தம்பிலுவில் மத்திய மகாவித்தியால ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக நடைபெற்றது.



தம்பிலுவில் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களில் தரம் 05 புமைப்பரிசில் 2023,2024,2025 ஆண்டுகளில் சித்தியடைந்த 100 மேற்பட்ட மாணவர்களுக்கு புலமைபரிசில் சான்றிதழ் மற்றும் பரிசுப்பொதிகள் வழங்கப்பட்டது. (அ)

# கோட்டாவின் இயற்கை உர திட்டத்தை முற்றாக அழித்தது அசோக ரன்வலவே!

கொழும்பு, ஜூலை. 07

கடந்த 2022ஆம் ஆண்டில், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்ட இயற்கை உரத் திட்டத்தை முழுமையாக அழித்தது முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவே என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்த்தன பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் மாவனெல்லை பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இயற்கை உரத் திட்டம் ஏன் தோல்வியடைந்தது என்று நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரடியாகக் கேட்டபோது, அவரே இந்த உண்மைகளை ஒப்புக்கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கே தெரியாமல் இந்த இயற்கை உரத் திட்டத்தை முழுமையாகப் பொறுப்பேற்று, தனது நிறுவனத்தின் ஊடாக அசோக ரன்வலவே அதனை நடத்தினார்.

பேச்சுவார்த்தை மேசைகளில் அமர்ந்து கொண்டு கோட்டாபயவுக்கு அவரே முழுமையான நம்பிக்கையளித்தார்.

ஆனால், அவர் ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர் என்பது கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெரிந்திருக்கவில்லை.

தேர்தலில் தோல்வியடைந்த பின்னரே அசோக ரன்வலவே ஜே.வி.பி காரர் என்ற உண்மை கோட்டாபயவுக்குத் தெரியவந்தது.

அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே திட்டமிட்டுச் செய்யப்பட்ட இந்தச் சதித்திட்டத்துக்குப் பிரதி உபகாரமாகவே, அசோக ரன்வலவுக்குச் சபாநாயகர் பதவி வழங்கப்பட்டது.

அவர்கள் 2024ஆம் ஆண்டுக்கு முன்பே உண்மையான திருட்டுகளைச் செய்து, அந்தப் பணத்தை முதலீடு செய்துள்ளனர். அவ்வாறு இல்லையென்றால், குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியுள்ள குமார் ஜயக்கொடி போன்றவர்கள் இவ்வளவு சுதந்திரமாக நடமாட முடியாது.

அதேபோல், தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷவின் வீட்டில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவரிடமிருந்து 25 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

அநுர குமார லட்சக்கணக்கில் பணத்தைப் பெறும்போது அது "பரிசு" என்றும், நாட்டின் ஏனைய பொது மக்கள் யாராவது அதைப் பெற்றால் அது "திருட்டு" என்றும் முத்திரை குத்தப்படுவது எந்த வகையான கோட்பாடு என்பதை ஜே.வி.பியினர் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குடிவரவுத் திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் கைது!

கொழும்பு, ஜூலை. 07

போலி வெளிநாட்டு கடவுச் சீட்டு தயாரிப்பதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்றுக் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின்படி, சென்னையில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர் ஒருவரின் புகைப்படத்துடன், வேறொரு நபரின் தரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பத்தை முறையான பரிசோதனையின்றி ஏற்றுக் கொண்டு, வெளிநாட்டு கடவுச் சீட்டை வழங்க உடந்தையாக இருந்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மாத்தறை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு தொடர்பான நீதவானின் உத்தரவுக்கமைய பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (அ)

## சிறைக்குள் வெடித்த...

அவர் திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இது தொடர்பில் நேற்று பிற்பகல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அங்கு ஏற்பட்ட மனித உயிரிழப்பு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் நாம் தெரிவிக்க வேண்டும்.

நாம் அங்கு சென்று என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, இது மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்காக நாங்கள் யாரையும் குற்றம் சாட்டவில்லை.

நீதித்துறை அமைச்சராக எனது அதிகார வரம்பிற்குட்பட்ட ஒரு நிறுவனத்தில் இது நடந்துள்ளது என்பது உண்மையான அதிர்ச்சியை அளிக்கிறது. எனவே, நாம் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். இப்போது, வருந்துவதை விடுத்து, இது எப்படி நடந்தது? இதில் என்ன பிரச்சினை? யாராவது தவறு செய்தார்களா? இந்தப் பிரச்னை எப்படி உருவானது?

எதிர்காலத்தில் இது மீண்டும் நிகழாமல் எப்படித் தடுப்பது? இதை மிக விரைவாகக் கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

சில நேரங்களில் இதுபோன்ற விஷயங்கள் நடக்கின்றன. இதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இதை சுலபமாக கடந்து செல்லவும் முடியாது. ஏனென்றால், மனித உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. சம்பவம் குறித்து நாம் தீவிரமாக விசாரிக்க வேண்டும்- என்றார். (அ)

## கைதிகளிடமும் துப்பாக்கி...

வெளியாகியுள்ளது.

மோதலின்போது சிறைக்கைதிகளின் கைகளில் சிறைச்சாலைப் பாதுகாப்புக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த துப்பாக்கிகள் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

அவ்வாறான நிலைமையில் நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தீவிரம் பெறக்கூடும் என்ற அச்சம் காரணமாக சிறைச்சாலையைச் சுற்றிலும் கடுமையான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

நீர்கொழும்பு சிறைக்குள் நிலவும் மோசமான சூழ்நிலையைக் கண்காணிப்பதற்காக நேற்று காலை இலங்கை விமானப்படை ஒரு ஆளில்லா விமானத்தை அனுப்பியது. (அ)

## சிறைக்குள் நேற்றும்...

சிறைச்சாலை திணைக்களம் என்பன விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றன.

நீர்கொழும்பு சிறைச்சாலை மற்றும் அதனைசூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மோதல் காரணமாக ஏற்பட்ட காயங்களுடன் சுமார் 100 பேர் வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களில் 15 பேர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் காரணமாக கைதிகள் முன்வாசல் வழியாக சிறையை விட்டு வெளியேற முயன்றதால், நிலைமையைக் கட்டுப்படுத்த அதிகளவு பொலிஸாருடன், சிறப்பு அதிரடிப் படையும் களமிறக்கப்பட்டனர்.

துப்பாக்கிச்சத்தம் கேட்டதை அடுத்து, சிறைக்கைதிகளின் உறவினர்கள் குவிந்து மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டதால், நிலைமையைக் கட்டுப்படுத்த சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சம்பவ இடத்தில் நிலைமை தீவிரமடைந்ததால் கட்டுப்படுத்த பொலிஸ், சிறப்பு அதிரடிப்படை, இலங்கை இராணுவம், விமானப்படை மற்றும் பிற பாதுகாப்புப் படைகளை வரவழைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் சிலரின் உடல்களில் துப்பாக்கிச்சூட்டு காயங்களும் கண்டறியப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## பாதுகாப்புத் தரப்பின்...

வெளிப்படத் தொடங்கியதையடுத்து, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தரப்பில் இருந்தே முதலாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இடையே மோதல் எழுந்துள்ள நிலையில், சிறை பாதுகாப்பு தர அதிகாரிகளும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தரப்புக்கு ஆதரவாக தங்கள் கடமையின் நிமித்தம் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகளைக் கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் இரு தரப்பு மோதலும் வன்முறையாக வெடிக்கத் தொடங்கிய நிலையில், கைதிகளை நோக்கிச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தரப்பில் இருந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதன்போது, சிவில் உடையில் இருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் விமானப்படையினரால் சிறைச்சாலையின் மேற்புற ஆகாய வெளியில் நிலைநிறுத்தப்பட்ட ஆளில்லா உளவு விமானத்தின் மீதும், அது மூன்றாம் தரப்பின் ட்ரோன் விமானமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தாமல் கைதிகளை கட்டுப்படுத்தி, வன்முறையை தவிர்த்து சிறைச்சாலைக்குள் அமைதி நிலைமையை ஏற்படுத்த போதுமான அவகாசம் இருந்தபோதும், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆரம்பம் தொட்டே கைதிகளுடன் ஆக்ரோஷம் மற்றும் வன்முறையை வெளிக்காட்டும் வகையில் நடந்துகொண்டதாகவும் கைதிகள் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது. (அ)

## நீர்கொழும்பு பெண்...

அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள், சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் துப்பாக்கிச் சூட்டில் சுமார் 20 ஆண் கைதிகள் கொல்லப்பட்டதாகக் குற்றம் சாட்டினர்.

சிறையில் நிலவும் சூழ்நிலை காரணமாக, தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான பால் மாவும் உணவும் கிடைக்கவில்லை என்றும், அதிகாரிகள் இதற்கு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், நிலவும் பாதுகாப்பின்மையைக் கருத்தில் கொண்டு, தங்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும், தங்கள் வழக்குகளை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பெண் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## மாதகல் விபத்தில்...

சில்லாலையை சேர்ந்த 80 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் குறித்து இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## சிறைச்சாலை அதிகாரிகள்...

மோதலின் காரணமாக இதுவரை கொல்லப்பட்ட சிறை அதிகாரிகளின் எண்ணிக்கை 7 ஆகும். அத்துடன் 19 கைதிகளும் உயிரிழந்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக 23 சிறை அதிகாரிகளும் 54 கைதிகளும் இன்னும் சிகிச்சை பெற்று வருவதாகவும், சிறைச்சாலை வட்டாரங்கள் மற்றும் மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

## வடக்கு ஆளுநரின்...

திகதி ஆளுநரால் வெளியிடப்பட்ட பதவி நீக்க வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி, ஞானப்பிரகாசம் கிஷோர் கடந்த 4ஆம் திகதி இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

சாவகச்சேரி நகர சபை தொடர்பில் விசாரணை நடத்திய தனிநபர் விசாரணை அதிகாரி க.அரியநாயகம், தனது அறிக்கையில் நகர சபையை முழுமையாகக் கலைக்குமாறு பரிந்துரைத்திருந்த பின்னணியில், தன்னை மாத்திரம் இலக்கு வைத்து பதவி நீக்கியது ஏன் என மனுதாரர் தனது மனுவில் கேள்வி எழுப்பியிருந்தார்.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, நகராட்சி மன்றங்களின் சுயாதீன அதிகாரங்களில் ஆளுநர் தலையீடு செய்வது ஜனநாயகத்தை மீறும் செயல் என நீதிமன்றத்தில் வாதிட்டார்.

இருப்பினும், தரப்பு வாதங்களை நீண்ட நேரம் பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி க.சதீஸ்வரன், ஆளுநரின் வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை விதிக்க மறுப்புத் தெரிவித்தார்.

அதேநேரம், இந்த விவகாரத்தில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் தனிநபர் விசாரணை அதிகாரி ஆகியோருக்கு நீதிமன்ற அறிவித்தலை அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

## ஓய்வு பெற்ற...

முறையான மற்றும் விரிவான விசாரணை நடத்தி, சம்பவத்திற்கான காரணங்கள், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக, குறித்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ இக்குழுவின் தலைவராகவும், ஓய்வுபெற்ற மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி மிலிந்த குணதிலக்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி மொகான் வீரக்கோன் ஆகியோர் மற்ற உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின் அனைத்து விடயங்களையும் விரிவாக விசாரித்து, தனது பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க இக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## பரபரப்பை...

மேலும், விஜயதாஸ மீதான குற்றச்சாட்டுகளை ரணில் விக்கிரமசிங்க முற்றாக நிராகரித்துள்ளார்.

பாதாள உலக கும்பல் தலைவன் "ஹரக் கட்டா" முறையற்ற விதத்தில் பாதுகாக்கப்பட்டதாக எழுந்த முறைப்பாடுகளுக்கு பதில் அளித்த ரணில்," அவரது கைது மற்றும் தடுப்புக்காவல் தொடர்பான அனைத்து சட்ட நடைமுறைகளும் சரியாகவே பின்பற்றப்பட்டன.

அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக எனது ஒப்புதலுடன்தான் அனைத்து ஆவணங்களும் கையெழுத்தாகின. இதில் தனிப்பட்ட நபர்கள் யாரும் தலையிட முடியாது" எனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஒரு நபரைக் காவலில் வைப்பதும், அவரது மனித உரிமைகளை பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமை என்றும், இதில் முறையற்ற தலையீடு எதுவும் இல்லை என்றும் ரணில் அங்கு கூடியிருந்தவர்களிடம் விளக்கம் அளித்துள்ளார்.

ரணிலின் திடீர் வருகை இப்போது இலங்கையில் பெரும் பேசும் பொருளாக மாறி உள்ளது. (அ)

## நீர்கொழும்பிலிருந்து...

நேற்று முன் தினம் நீர்கொழும்பு சிறையில் இரு குழு கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், நேற்றுக் காலை மீண்டும் கலவரம் வெடித்தது.

விசாரணைக் காவலில் இருந்த ஒரு குழு கைதிகளுக்கும், தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த மற்றொரு குழு கைதிகளுக்கும் இடையே இந்த மோதல் நிகழ்ந்திருந்தது.

படுகாயமடைந்த 18 பேரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்போது, நிலைமை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# முன்னாள் முக்கியஸ்தர்கள் 30 பேர் மீது விசாரணைகள்!

## அரசியல்வாதிகள், அதிகாரிகள் உள்ளடக்கம்

கொழும்பு, ஜூலை. 07

முன்னைய அரசாங்கங்களில் முக்கிய பதவிகள் வகித்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் உள்ளிட்ட முப்பது பேருக்கு எதிரான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அதிகாரமிக்க அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் சொத்துக்கள் மீதான விசாரணைகளும் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் ஆரம்ப கட்டமாக அரசியல் மற்றும் அரசாங்கத் துறைகளில் உயர் பதவிகளை வகித்த சுமார் 30 முக்கிய பிரமுகர்களின் சொத்துக்கள் மீதான விசாரணையைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2020 மற்றும் 2024 இற்கு இடையில் நாட்டின் அரசியல் அதிகாரம் மற்றும் நிர்வாகத்தில் செல்வாக்கு மிக்க பதவிகளை வகித்த ஒரு குழுவினரே இந்த விசேட விசாரணைகளில் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய விசாரணை செயல்முறையின் கீழ், குற்றப் புலனாய்வுத் துறையால் தற்போது பராமரிக்கப்படும் சில சொத்து விசாரணை கோப்புகளை, மேலதிக சட்ட நடவடிக்கைக்காக, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு மேலதிகமாக நாட்டின் அரசியல் களத்தில் உள்ள பல சக்திவாய்ந்த பிரமுகர்களின் சொத்துக்கள் குறித்து உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

(அ)

# ஊழல்வாதிகள் தப்ப முடியாது!

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க



கொழும்பு, ஜூலை. 07

நாட்டில் ஊழல் மற்றும் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துவிடவே முடியாது என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தராசு பார்க்காமல் சட்ட ரீதியான கடுமையான நடவடிக்கை எடுப்பது தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசின் முதன்மைப் பொறுப்பாகும்.

இதனைச் சிலர் "அரசியல் பழிவாங்கல்" எனப் பூசி மெழுகப் பார்க்கின்றனர். ஆனால், இதுவொருபோதும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல.

மாறாக, ஊழலுக்கு எதிராக ஒட்டுமொத்த நாட்டு மக்களும் எமக்கு வழங்கியுள்ள வரலாற்று ஆணைக்கு மதிப்பளித்து, அதனை நடைமுறைப்படுத்தும் தூய்மையான செயற்பாடாகும்.

எனவே, யார் எந்தவொரு உயர் பதவியில் இருந்தாலும், சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களே. நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருந்த ஊழல் அரசியல் கலாசாரத்தை வேரோடு மாற்றி, தூய்மையான சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதே தற்போதைய அரசாங்கத்தின் இறுதி நோக்கமாகும்.

ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிப்பதற்கான எமது இந்த ஒட்டுமொத்த நடவடிக்கைகள் எவ்விதத் தொய்வுமின்றித் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் - என்றார்.

(அ)

# கோவில்குளத்தின் நீரேந்து பகுதி ஆக்கிரமிப்பு கமக்காரர்களும் பொதுமக்களும் போராட்டம்!



வவுனியா, ஜூலை 07

வவுனியா கோவில்குளத்தின் நீரேந்து பகுதிப் பெண் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு அப்பகுதியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், குளத்துக்கு இயற்கையாக வரும் நீர்வரத்து தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி, அப்பகுதியின் கமக்காரர் அமைப்பினரும் பொதுமக்களும் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் போராட்டம், பேரணியாக வவுனியா மாவட்ட செயலகம் நோக்கிச் சென்றது. அங்கு போராட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகள் உள்ளடக்கிய மகஜரை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

குளத்தின் நீரேந்துப் பகுதி பாதுகாக்கப்படவேண்டிய பொதுச் சொத்தாகும் என்றும், அப்பகுதியில் இடம்பெறும் ஆக்கிரமிப்புகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் குளத்துக்கு வரும் நீர்வரத்து பாதிக்கப்படுவதுடன் விவசாயமும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் கமக்காரர் அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், மகஜரை பெற்றுக்கொண்ட வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர, குறித்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என போராட்டக்காரர்களிடம் உறுதியளித்தார்.

(அ)

# பாதாள உலகக் குழுவுடன் இணைந்து ஆட்சியை கவிழ்க்க எதிர்க்கட்சி கனவு!

## சதுரங்க அபேசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 07

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள், தற்போதைய அரசியல் சூழல் தொடர்பாக எதிர்க்கட்சியினரின் உண்மையான அச்சத்தையும், அவர்களது அடிமனதில் உள்ள வங்குரோத்து நிலைமையையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய நிர்வாக கட்டமைப்பு மற்றும் தீவிர ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக, பழைய அரசியல் நடைமுறைகளை இனிமேலும் தொடர முடியாத சூழல் உருவாகியுள்ளது. இதுவே எதிர்க்கட்சியினரின் கருத்துக்களில் ஏமாற்றமாகப் பிரதிபலிக்கின்றது.

புதிய விதிமுறைகளின்படி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் தனிப்பட்ட ஊழியர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் அனைவரும் தங்களது சொத்து விவரங்கள் மற்றும் வங்கி கணக்கு விவரங்களைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவை அனைத்தும் தற்போது முழுமையாக டிஜிட்டல் அமைப்பில் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வெளிப்படையான டிஜிற்றல் முறையினால், எதிர்காலத்தில் பழைய பாணியில் ஊழல் அரசியல்வாதிகள் எவரும் தப்பித்துக் கொள்ளவோ, முறைகேடாக அரசியலில் ஈடுபடவோ முடியாது.

அவர்களால் தங்களது நண்பர்களுக்கோ அல்லது உறவினர்களுக்கோ முறைகேடாகப் பணம் சம்பாதிக்க வழிவகுக்க முடியாது என்பதுடன், எவரும் வரி வலையமைப்பில் இருந்தும் தப்பிக்க முடியாது.

இதனால் கடந்த காலத்தில் செய்த தவறுகளுக்குப் பொறுக்கூற வேண்டியிருக்குமோ என்ற பயமும், தங்களின் வாரிசுகளுக்காக அமைத்து வைத்திருந்த ஊழல் அரசியல் பாதை முற்றிலும் இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கமும் எதிர்க்கட்சியினருக்கு எழுந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எப்போதும் சுய இலாபத்துக்காக வாய்ப்புள்ள பக்கம் தாவிவிடும் அரசியல் குணம் கொண்டவர்.

எதிர்க்கட்சியில் உள்ள மற்ற தலைவர்கள் தங்களது மனதிற்குள் மறைத்து வைத்திருக்கும் உண்மையை அவர் இப்போது பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய அரசு ஏதேனும் பொருளாதார வீழ்ச்சி அல்லது இயற்கை பேரிடரால் கவிழ்ந்துவிடாதா அல்லது பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்து இந்த ஆட்சியை கவிழ்த்துவிட முடியாதா என்ற இரகசியக் கனவுடனேயே எதிர்க்கட்சியினர் தினமும் இரவில் தூங்கி, காலையில் விழிக்கின்றார்கள் என்பதை தயாசிறியின் பேச்சு மிகத் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளது - என்றார்.

(அ)

# தொழிற்சங்கங்களை ஒடுக்குகின்றது அரசு!

## சமன் ரத்னப்பிரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 07

தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னிறுத்தி ஆட்சிக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தற்போதைய அரசாங்கம், தொழிற்சங்கங்களை நசுக்கி அழிக்கும் எண்ணத்துடன் செயற்பட்டு வருகின்றது என்று சுகாதாரத் தொழில்முறை நிபுணர்களின் தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் தொழிற்சங்க உரிமைகள் மீதான அழுத்தங்களும் ஒடுக்குமுறைகளும் அதிகரித்து வரும் நிலையில், தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளையும் நாட்டின் ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் நோக்கில் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒருங்கிணைக்கும் "தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம்" உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் இன்று பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. தொழிலாளர்களுக்குரிய உரிமைகளும் சலுகைகளும் மறுக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதுடன், குறைந்தபட்ச சமூக உரையாடல்களுக்கான வாய்ப்புகூட இல்லாத நிலை காணப்படுகின்றது.

ஆளும் தரப்பினருடனோ அல்லது அமைச்சர்களுடனோ தொழிற்சங்கங்கள் சுதந்திரமாகக் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர் அமைச்சின் ஊடாகச் சில தொழிற்சங்கங்களைச் செயலிழக்கச் செய்வதற்கும், அவற்றுக்குள் திட்டமிட்டுப் பிரச்சினைகளை உருவாக்குவதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மற்றொரு புறம், நாட்டில் வாழ்க்கைச் செலவு பாரியளவில் அதிகரித்துள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், தொழிலாளர்கள் பெற்றுவரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், தங்களின் கோரிக்கைகளை முன்வைக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் பல்வேறு அழுத்தங்களும் ஒடுக்குமுறைகளும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media